Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

செய்தியாளர்கள் தேவை

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 068 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 07.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## பரபரப்பாகும் அரசியல் களம்...

# த.வெ.க.வில் இணைந்த அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள்



தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலுக்கு பின் அ.தி.மு.க.வில் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஒரு அணியும், முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, சி.வி. சண்முகம் தலைமையில் மற்றொரு அணியும் என 2 ஆக பிரிந்தது. இதில் எஸ்.பி.வேலுமணி, சி.வி. சண்முகம் தரப்பினர் தவெகவுக்கு ஆதரவு அளித்தனர். தொடர்ந்து இரு தரப்பினரிடையே பிரச்சினை அதிகரித்து வந்தது. அதிமுக கொறடாவாக தங்களை நியமிக்கக்கோரி இரு தரப்பினரும் சபாநாயகரிடம் மனு அளித்தனர். இதற்கிடையே எஸ்.பி.வேலுமணி தரப்பு எம்.எல்.ஏ.க்கள் 4 பேர் தங்களது பதவியை ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் இணைந்தனர். மேலும் 6 பேர் எடப்பாடி பழனிசாமி அணியில் இணைந்தனர்.

**சமரச பேச்சுவார்த்தை**

நிலமை மோசமாக செல்வதை உணர்ந்த இரு தரப்பினரும், தற்போது ஒன்றாக செயல்பட முடிவு செய்தனர். இதையடுத்து, அதிமுகவை ஒன்றிணைக்கும் நோக்கில் இரு தரப்பினரும் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினர். இதனை தொடர்ந்து சி.வி.சண்முகம் இல்லத்தில் இருந்து எஸ்.பி. வேலுமணி தலைமையில் 14 எம்.எல்.ஏ.க்கள் எடப்பாடி பழனிசாமியை சந்திக்க இன்று புறப்பட்டனர். பறித்த கட்சி பதவிகளை மீண்டும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் எடப்பாடி பழனிசாமியை சந்திப்பதாக தகவல் வெளியானது.

**தவெக ஆதரவு வாபஸ்**

எஸ்.பி. வேலுமணி தரப்பு எம்.எல்.ஏ.க்கள், எடப்பாடி பழனிசாமியை சந்தித்து மன்னிப்பு கடிதம் வழங்கினர். எடப்பாடி பழனிசாமி உடனான சந்திப்புக்குப் பிறகு எஸ்.பி.வேலுமணி உள்ளிட்ட அதிமுக எம்.எல்.ஏ.க்கள் சபாநாயகரை சந்தித்து சட்டப்பேரவை வாக்கெடுப்பில் தவெக அரசுக்கு ஆதரவு தெரிவித்ததையும் வாபஸ் பெறுவதாக கடிதம் அளித்தனர்.

அதிமுகபொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் எஸ்.பி. வேலுமணி தரப்பினர் இடையேயான சமரச முயற்சி கைகூடியுள்ள நிலையில் இரு தரப்பினரும் சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் அலுவலகத்துக்கு ஒன்றாக சென்றனர். அதேபோல, கொறடா விவகாரம் தொடர்பாக சபாநாயகரிடம் கொடுத்த கடிதத்தையும் திரும்ப பெற்றனர். ஒரே அணியாக இருப்பதாக சபாநாயகரிடம் தெரிவித்தனர். மேலும், எடப்பாடி பழனிசாமியை அதிமுக சட்டமன்றக் குழு தலைவராக நியமிக்கக்கோரி சபாநாயகரிடம் கடிதம் வழங்கினர். அதேபோல, அதிமுக கொறடாவாக அக்ரி கிருஷ்ணமூர்த்தியை நியமிக்கக் கோரியும் சபாநாயகரிடம் மனு அளித்தனர்.

இந்த சூழலில் அதிமுக எம்.எல்.ஏ.க்களில் ராஜினாவால் மதுராந்தகம், பெருந்துறை, தாராபுரம், அம்பை உள்ளிட்ட தொகுதிகள் காலியானதாக அறிவிக்கப்பட்டது.

தற்போது, எஸ்.பி. வேலுமணி தலைமையிலான அணியினர் எடப்பாடி பழனிசாமியுடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர். இதில் சி.வி.சண்முகம் மற்றும் விஜயபாஸ்கர் ஆகியோர் தங்களது நிலைப்பாடு குறித்து இதுவரை அறிவிக்கவில்லை.

**த.வெ.க.வில் இணையும் முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்கள்**

இந்த நிலையில், சென்னை பனையூரில் உள்ள தலைமை அலுவலகத்தில் த.வெ.க. பொதுச்செயலாளர் ஆனந்த் முன்னிலையில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மற்றும் முன்னாள் அ.தி.மு.க. எம்எல்ஏக்கள் தவெகவில் இணைந்தனர்.

இதன்படி அதிமுக முன்னாள் அமைச்சர்கள் கடம்பூர் ராஜூ, உடுமலை ராதாகிருஷ்ணன், கடலூர் எம்.சி.சம்பத், தருமபுரி பாப்பிரெட்டிபட்டி அதிமுக முன்னாள் எம்எல்ஏ கோவிந்தசாமி, சேலம் சங்ககிரி அதிமுக முன்னாள் எம்எல்ஏ சுந்தரராஜ், சேலம் வீரபாண்டி அதிமுக முன்னாள் எம்எல்ஏ ராஜமுத்து, விருதுநகர் ஸ்ரீவில்லிபுத்தூர் அதிமுக முன்னாள் எம்எல்ஏ மான்ராஜ், விருதுநகர் சாத்தூர் அதிமுக முன்னாள் எம்எல்ஏ ராஜவர்மன் உள்ளிட்ட பலர் தவெகவில் தங்களை இணைத்துக்கொண்டனர். சட்டமன்றத் தேர்தல் தோல்விக்கு பின் அதிமுகவில் உட்கட்சி பூசலும் அதிருப்தியும் நிலவி வரும் சூழலில், இந்த மூத்த நிர்வாகிகள் கட்சி மாறவிருப்பது அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# திமுக தயவில் தவெக ஆட்சி; திமுக தலைவர் ஸ்டாலின் பேச்சு



சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்ட - காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய அதிமுக செயலாளர் கஜா (எ) கஜேந்திரன் தலைமையில் மாற்றுக்கட்சியினர் மு.க. ஸ்டாலின் தலைமையில் திமுகவில் இணைந்தனர்.

பின்னர் உரையாற்றிய திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் கூறியதாவது,

75 ஆண்டு காலம் தன்னுடைய லட்சியப் பயணத்தைத் தொடர்ந்து நடத்தி, பவள விழா கொண்டாடி இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். ஒரு இயக்கத்தில் இருந்து இன்னொரு இயக்கத்திற்குப் பிரிந்து போகிறார்கள் என்று சொன்னால், ஏதோ ஒரு லாபத்தை அடிப்படையாக வைத்து, ஏதோ வசதியை மனதில் கொண்டு, ஆளுங்கட்சியை நோக்கித்தான் அதிகமாகப் போவதுஉண்டு. அதைத்தான் நாமும் பார்த்திருக்கிறோம்.

ஆனால் இன்றைக்கு தி.மு.க. ஆளுங்கட்சி அல்ல ஆளுங்கட்சியாக இருந்து, இப்போது எதிர்க்கட்சியாக மாறி இருக்கிறது. அதனால் எதிர்க்கட்சியை நோக்கி நீங்கள் எல்லாம் வந்திருக்கிறீர்கள் என்று சொன்னால், பதவிக்காக நீங்கள் வரவில்லை, சொகுசாக வாழ வேண்டும் என்பதற்காக நீங்கள் எல்லாம் வரவில்லை. பணியாற்ற வேண்டும், இந்த இயக்கத்திற்குத் துணை நிற்க வேண்டும், தமிழ் சமுதாயத்திற்கு நாம் பாடுபட வேண்டும், இழந்திருக்கும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வோடு வந்திருக்கிறீர்கள்.

1989-இல் ஆட்சிக்கு நான் சொல்கிறேன் என்று சொன்னால், வெற்றி தோல்வி என்பது நம்மைப் பொறுத்தவரையில் மாறி மாறி வரும். அதற்காக வெற்றியைக் கண்டு வெறி கொண்டு அலைந்து கொண்டிருப்பதும் இல்லை; தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் என்றைக்கும் பணியாற்றக் கூடியவன்தான் தி.மு.க. காரன் என்பதை இன்றைக்கு நாம் நிரூபித்துக் கொண்டிருக்கிறோம். இப்போது ஆட்சி நடப்பதே நம்முடைய தயவில் தான் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. நாம் வெற்றி பெறவேண்டும்; தி.மு.க. தலைமையில் ஆட்சி அமைய வேண்டும்; எதிர்க்கட்சிகள் எல்லாம் தோற்க வேண்டும் என்ற நிலையில் தான் நாம் தேர்தல் களத்தைச் சந்தித்தோம். நம்முடைய கூட்டணியில் இருந்த கட்சிகளின் தயவோடு தான் இன்றைக்கு இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. தி.மு.க. ஆட்சிக்கு வர வேண்டும் என்று கருதி நம்மோடு கூட்டணியில் இருந்த கட்சிகளின் தயவோடு தான் இன்றைக்கு இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. அந்தக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களே பல இடங்களில் குறிப்பி ட்டுச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் சொல்லிவிட்டுச் செல்லுகிற நேரத்தில் நான் சொன்னேன், "நீங்கள் செல்லுங்கள்; உங்களுடைய விருப்பம்; உங்களுக்கு இருக்கும் ஜனநாயகம்; நான் தடுக்க மாட்டேன். நாட்டிலே ஜனாதிபதி ஆட்சி வந்துவிடக் கூடாது; அதன் மூலமாக பி.ஜே.பி. ஆட்சி தமிழ்நாட்டில் வந்துவிடக் கூடாது என்ற அடிப்படையில் தான் அவர்களை நான் வழியனுப்பி வைத்தேன்." நம்முடைய தயவோடு நடைபெறும் இந்த ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்த நிகழ்ச்சியில் உறுதி எடுப்போம். என தெரிவித்தார்.

# ஆன்லைனில் இருந்து களத்துக்கு வந்த கரப்பான்பூச்சி ஜனதா கட்சி; டெல்லியில் மிகப்பெரிய போராட்டம்

உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சூர்யகாந்த், வழக்கு ஒன்றின் விசாரணையின்போது சில கருத்துகளை கூறியிருந்தார். அமெரிக்காவில் தங்கி படித்து வரும்



இந்தியரான அபிஜீத் திப்கே, தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் 'கரப்பான்பூச்சி ஜனதா கட்சி' என்ற பெயரில் ஒரு நையாண்டி பக்கத்தைத் தொடங்கினார். அந்த பக்கத்தை இளைஞர்கள் அதிகளவில் ஃபாலோ செய்தனர். ஒரு கட்டத்தில் பாஜகவின் அதிகாரப்பூர்வ இன்ஸ்டாகிராம் பக்கத்தையே அது விஞ்சியது. இதையடுத்து, அந்த இன்ஸ்டாகிராம் பக்கத்திற்கு மத்திய அரசு தடை விதித்திருந்தது.

எனினும், அனைத்து சமூக வலைதளப் பக்கங்களிலும் 'கரப்பான்பூச்சிஜனதாகட்சி' பெயரில் மீண்டும் புதிய பக்கங்கள் உருவாக்கப்பட்டன. இந்த பக்கங்களையும் இளைஞர்கள், இளம்பெண்கள் ஃபாலோ செய்து வருகின்றனர்.

இந்த சூழலில், நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்தில் மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தி, தலைநகர் டெல்லியில் உள்ள ஜந்தர் மந்தரில் (ஜூன் 06) காலை 'கரப்பான்பூச்சி ஜனதா கட்சி' சார்பில் பெரிய அளவிலான போராட்டம் நடைபெற்று வருகிறது.

அமெரிக்காவில் உள்ள கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் தேசிய தலைவர் அபிஜீத் திப்கே, இந்த போராட்டத்தில் பங்கேற்பதற்காக தற்போது டெல்லிக்கு வந்துள்ளார்.

போராட்டத்தை முன்னிட்டு டெல்லி ஜந்தர்மந்தரில் டெல்லி காவல்துறையினர் மற்றும் துணைராணுவப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். பெருந்திரளான மக்கள் போராட்டத்தில் கூடுவார்கள் என்பதால் போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்தவும், நிலைமை மோசமடைந்தால் அவர்களை எளிதில் கட்டுப்படுத்தும் விதமாக டெல்லி காவல்துறை தடுப்புகளை அமைத்துள்ளது.

போராட்டத்தில் பங்கேற்பவர்கள் செய்ய வேண்டியவை என்ன? செய்ய கூடாதவை என்ன? என்பது குறித்த துண்டுப்பிரசுரத்தை கரப்பான்பூச்சி ஜனதா கட்சி ஏற்கனவே வெளியிட்டிருந்தது. மேலும், போராட்டத்தில் கலந்து கொள்வோர் காலை உணவை அருந்திக் கொள்ளுங்கள், கையில் தேசியக்கொடியை ஏந்தியும், தண்ணீர் பாட்டிலுடனும் வாருங்கள் என்று அழைப்பு விடுத்துள்ளது. அதேபோல், போராட்டத்தை அமைதியாகவும், அரசியலமைப்புக்குட்பட்டும், ஒழுக்கத்துடனும் நடத்துமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

குடும்பத்துடன் போராட்டத்தில் கலந்துக் கொள்ளுமாறு 'கரப்பான்பூச்சி ஜனதா கட்சி' அழைப்பு விடுத்துள்ளது. இந்திய கல்வி முறையில் மாற்றம் வேண்டும், மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியே இன்றைய போராட்டம் நடைபெற்று வருகிறது.

வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☎ +919444082959

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# உலக சுற்றுச்சூழல் தினம்:

## மாணவர்கள் பங்கேற்புடன் மரக்கன்றுகள் நட்டு விழிப்புணர்வு ஏற்படுத்திய சேர்மன் மாணிக்க வாசகம் பள்ளி

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் கன்றுகளை நட்டார்.

நிகழ்ச்சியில் மாணவர்களுக்குசுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியம், என எடுத்துரைக்கப்பட்டது.

ஒரு மாணவர் - ஒரு மரம் என்றஎண்ணத்து-



அமைந்துள்ள சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் மரக்கன்றுகள் நடும் விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு பள்ளி தலைமையாசிரியர் லெ. சொக்கலிங்கம்தலைமை தாங்கினார். ஆசிரியை முத்துலெட்சுமி வரவேற்புரை ஆற்றினார். தேவகோட்டை நகராட்சி களப்பணி உதவியாளர் ரஞ்சித் குமார் மாணவர்களுடன் இணைந்து பள்ளி வளாகத்தில் பல்வேறு வகையான மரக்-

மரங்களின் பங்கு, இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மற்றும் செடிகளை வளர்ப்பதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் குறித்து விளக்கப்பட்டது. மேலும், மரங்கள் காற்றை தூய்மைப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், மழைப்பொழிவை அதிகரிக்கவும், நிலத்தடி நீரை பாதுகாக்கவும், உயிரினங்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தவும் உதவுகின்றன

டன் ஒவ்வொரு மாணவரும் குறைந்தபட்சம் ஒரு மரக்கன்றையாவது நட்டு பராமரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது அனைவரின் கடமையாகும் என்பதையும் மாணவர்கள் உறுதியேற்றனர்.

நிகழ்ச்சிக்கானஏற்பாடுகளை ஆசிரியர் ஸ்ரீதர் செய்திருந்தார். ஆசிரியர்கள், மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# உளுந்தூர்பேட்டை அடுத்த கெடிலம் மாரனோடை சாலை பள்ளி செல்லும் வழியில் மதுக்கடை

## குற்றச்சம்பவங்கள் நடப்பதாகக் கூறி ஆர்ப்பாட்டம்

உளுந்தூர்பேட்டை அடுத்த கெடிலம் மாரனோடை சாலையில் பள்ளி செல்லும் வழியிலும் குடியிருப்பு பகுதி நடுவே உள்ள 11688 எண்

இந்த மதுபான கடை பள்ளி செல்லும் வழியிலும் குடியிருப்பு நடுவேயும் உள்ளதால், குடிபோதை ஆசாமிகளால் குழந்தைகள் மற்றும்

முது போராட்டக்காரர்களை பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் பேரிகார்ட் வைத்து தடுத்து நிறுத்தி தரதரவென இழுத்துச் சென்று



மதுக்கடையால் அத்துமீறல் மற்றும் குற்றச்சம்பவங்கள் நடப்பதாகக் கூறி 200க்கும் மேற்பட்ட பெண்கள் உட்பட பொதுமக்கள் மதுக்கடை மூடக்கோரி போராடியபோது, போலீசார் அவர்களை தரதரவென இழுத்துச் சென்று குண்டுக்கட்டாக கைது செய்ததில் பெண்கள் காயமடைந்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அடுத்த கெடிலம் பகுதியில் உள்ள மாரனோடை சாலையில் 11688 எண் கொண்ட மதுபான கடை செயல்பட்டு வருகிறது.

பெண்களிடம் அத்துமீறல் சம்பவங்கள் நடைபெறுவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மேலும் இந்த மதுபான கடையால் இப்பகுதியில் திருட்டு, கொள்ளை, தகராறு உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதாகக் கூறி கடையை மூடக்கோரி அப்பகுதியைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட பெண்களுடன் அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கையில் பதாகைகளை ஏந்தி கடையை மூட வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர் அப்பொ-

கைது செய்து வேனில் ஏற்றினர்.

தொடர்ந்து பெண்களை குண்டுக்கட்டாக கைது செய்து வேனில் ஏற்றினர். இதில் போலீசார் குண்டுக்கட்டாக இழுத்துச் சென்றதில் பெண்கள் காயமடைந்துள்ளனர். மேலும் கைது செய்யப்பட்டவர்களை தனியார் வேனியல் ஏற்றிக்கொண்டு தனியார் திருமண மண்டபத்தில் அடைத்தனர்

மதுக்கடையை மூடக்கோரி போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களை போலீசார் கைது செய்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.



கன்னியாகுமரி மாவட்டம் நுள்ளிவிளை ரயில்வே பாலத்தை உடனடியாக முடிக்க வேண்டும் மேலும் தற்காலிக பாலத்தை சீர்செய்து போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் வழி வகுக்க வேண்டும், இரணியல் ரயில் நிலையத்தை மேம்படுத்த வேண்டும், மேலும் ரயில்வே சார்ந்த சாலைபாதைகளை இணைப்புகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர். பிரதாப் தலைமையிலான ரயில்வே துறை அதிகாரிகளுடனான சந்திப்பின் போது கோரிக்கை வைக்கப்பட்டதாக எம்.பி விஜய்வசந்த் செய்தியாளர்களிடம் பேட்டி மேலும் குமரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் நான்கு வழிச்சாலை பணிகள் மண் தட்டுப்பாடு காரணமாக இழுபறி ஏற்பட்டுள்ளதாகவும் ஆறு மாதத்திற்குள் அந்த பணிகள் வரைந்து முடிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.



நியாய விலை கடை பணியாளர்களுக்கா இரவு பகல் பாராமல் கடினமாக உழைத்து சம்பள உயர்வு பெற்றுத்தந்த மாநில தலைவர் அவர்களுக்கு உளுந்தூர்பேட்டை நகர கூட்டுறவு கடன் சங்க அலுவலகத்தில் கள்ளக்குறிச்சி மாவட்ட விற்பனையாளர்கள் சங்கத்தின்சார்பாகநிதிவழங்கியும்மற்றும்சால்வைஅணிவித்துமரியாதைசெய்யப்பட்டது தலைமை மாவட்ட தலைவர் ராஜகோபால் அவர்கள் தலைமையில் கலந்து கொண்ட ஒன்றியநிர்வாகிகளுக்கும்நகரநிர்வாகிகளுக்கும்மற்றும்கலந்துகொண்டஅனைவருக்கும் திருநாவலூர்ஒன்றியத்தின்சார்பாகநெஞ்சார்ந்தவாழ்த்துக்களைதெரிவித்துகொள்கிறேன் ஒன்றுபடுவோம் போராடுவோம் வெற்றி பெறுவோம் இனியாவது அனைவரும் ஒன்றாக அணி திரள்வோம் திருநாவலூர் ஒன்றிய செயலாளர் டாக்டர் எம் எஸ் முருகன் கல ந்து கொண்டனர்.

# உளுந்தூர்பேட்டை அருகே உள்ள கொரட்டங்குறிச்சி கிராமத்தில் குடிநீர் விநியோகம் செய்யாததை கண்டித்து சாலை மறியல்

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள களமருதூர் ஊராட்சிக்கு உட்பட்டது கொரட்டங்குறிச்சி கிராமம் இந்த கிரா-

தில் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப முடியவில்லை எனவும் கூலி வேலைக்கு செல்ல முடியாமல் கடுமையாக அவதிப்படுவதாகவும்

போராட்டத்தில் ஈடுபட்டனர் இதனால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது இது பற்றிய தகவல் அறிந்த களமருதூர் போலீசார் சம்பவ இடத்-



மத்தில் சுமார் 200 மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வரும் நிலையில் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக கிராம ஊராட்சியின் மூலம் பொது மக்களுக்கு சரிவர குடிநீர் விநியோகம் செய்யவில்லை என கூறப்படுகிறது இது குறித்து ஊராட்சி நிர்வாகம் மற்றும் அரசு அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும் உரிய நடவடிக்கைஎடுக்கவில்லை இதனால் குறித்த நேரத்-

பொதுமக்கள் கூறு கின்றனர். மேலும் இது தொடர்பாக ஊராட்சி நிர்வாகமும் அரசு அதிகாரிகளும் தொடர்ந்து நடவடிக்கை எடுக்காததால் ஆத்திரமடைந்த கிராம மக்கள் 100க்கும் மேற்பட்டோர் பொதுமக்கள் மற்றும் பெண்கள் திருவெண்ணை நல்லூர் இருந்து உளுந்தூர்பேட்டை செல்லக்கூடிய சாலையில் உள்ள கொரட்டங்குறிச்சி கிராமத்தில் சாலை மறியல்

திற்கு விரைந்து சென்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட கிராம மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். ஊராட்சி மன்ற தலைவர் கதிரேசன் அவரிடம் பொதுமக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் இன்று மாலைக்குள் குடிநீர் தடையின்றி வழங்கப்படும் உறுதி அளித்ததன் பேரில் பொதுமக்கள் தங்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.



கூடலூர்பந்தலூர்பகுதிகளில்பருவமழைஆரம்பித்துபெய்துவருகிறது.இந்நிலையில் நேற்று இரவு பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதில் அங்கங்கே மரக்கிளைகள் உடைந்து விழுந்தது. இதனால் போக்குவரத்து பாதிப்பு மற்றும் மின்தடை ஏற்பட்டது. இதுபோல பிதர்காடு அருகே சோலாடி பகுதியில் மரக்கிளை உடைந்து மின்கம்பியில் விழுந்ததினால் பிதர்காடு சோலாடி பகுதியில் இரவு மின் விநியோகம் பாதிக்கப்பட்டது. இதுகுறித்து தகவல் அறிந்த மின்சார வாரிய பணியாளர்கள் உடனடி சீரமைப்பு பணிகள் மேற்கொண்டு சரி செய்தனர். இதனால் இந்த பகுதியில் மின் விநியோகம் சீரானது. அதுபோல் சேரம்பாடி செல்லும் சாலையில் காப்பிகாடு பகுதியில் நேற்று நள்ளிரவு மின்கம்பம் சாலையில் விழுந்தது. இதனால் போக்குவரத்து தமிழ்நாடு கேரள மாநில போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. தகவல் அறிந்த சேரம்பாடி மின்சார வாரிய பணியாளர்கள் நள்ளிரவில் மின்விநியோகம் நிறுத்தி சாலையில் விழுந்த மின்கம்பத்தை சாலையின் ஓரத்தில் தள்ளி வைத்ததனர். இதனால் போக்குவரத்து சீரானது காலையில் புதிய மின்கம்பம் அமைத்து மின்சார விநியோகம் தந்தனர்.



ஈரோடு மாவட்டம் தவெக ஈரோடு மேற்கு மாவட்ட செயலாளர் பிரதீப் குமார் தமிழக வருவாய்த்துறை அமைச்சர் செங்கோட்டையன் மற்றும் தமிழக கைத்தறித்துறை அமைச்சர் விஜய பாலாஜி ஆகியோரை நேரில் சந்தித்தார். தேர்தலில் வெற்றி பெற்றதற்கும், அமைச்சராக பொறுப்பேற்றதற்கும் ஈரோடு மேற்கு மாவட்ட நிர்வாகிகள் சார்பாக அமைச்சர்கள் இருவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தார். இந்நிகழ்வில் ஈரோடு தவெக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



ஈரோடு மாவட்ட காவல் துறை சார்பில் உலகச் சுற்றுச்சூழல் தினம் ஈரோடு மாவட்ட காவல் துறை அலுவலகத்தில் (ஜூன்.5) அன்று நடைபெற்றது. நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண்ஸ்ருதி கலந்து கொண்டு மாவட்ட காவல் துறை அலுவலகத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்தார். காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள் இணைந்து பொதுமக்களுக்கு மரக்கன்றுகளை வழங்கி சுற்று சூழல் குறித்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்தினர்.




ஈரோடு மாவட்டம் சிவகிரி பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள்கூட்டம்சிவகிரிபேரூராட்சிஅலுவலகத்தில் நடைபெற்றது. பேரூராட்சி மன்றத்தலைவர் பிரதீபா கோபிநாத் தலைமையில் நடந்த இக்கூட்டத்திற்கு பெரும்பாலான கவுன்சிலர்கள் வருகை புரிந்திருந்தனர். முடிந்த பணிகளை மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்தும்,நிலுவையிலுள்ளபணிகளைவிரைந்து முடிப்பதுகுறித்தும்இக்கூட்டத்தில்முடிவெடுக்கப்பட்டது.



ஈரோடு மாவட்டத்தில் உள்ள கொமாரபாளையம் ஊராட்சிசிவியார்பாளையம்தவளகிரிஸ்ரீதண்டாயுதபாணி திருக்கோவிலில் (ஜூன்.6) நேற்று சிறப்பு அலங்கார பூஜைகள் நடைபெற்றன. இதையொட்டி சுவாமிக்கு பால், பன்னீர், தேன், இளநீர் உள்ளிட்ட அஷ்ட திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு, மலர் அலங்காரங்களுடன் அர்ச்சனை நடைபெற்றது. இதில், திரளானபக்தர்கள்கலந்துகொண்டுபாலதண்டாயுதபாணி சுவாமியை தரிசனம் செய்தனர்.

# கிருஷ்ணகிரி அருகே 3 கிலோ வெள்ளி பொருட்கள் கொள்ளை



கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அருகே சரவணன் என்பவருக்கு சொந்தமான நகைக்கடையின் சுவரைதுளையிட்டு 3 கிலோ வெள்ளிப் பொருட்கள் கொள்ளை அடித்துள்ளனர். 3 கிலோ வெள்ளிப் பொருட்களை திருடிவிட்டு, இரும்பு லாக்கரை உடைத்து தங்க நகைகளையும் திருட முயன்றுள்ளனர். லாக்கரை கொள்ளையர்களால் திறக்க முடியாததால் 2 கிலோ தங்க நகைகள் தப்பின. 3 கிலோ வெள்ளிப் பொருட்களை கொள்ளையடித்துச் சென்றவர்களுக்கு போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.



ஈரோடு மாவட்டம் நம்பியூர் பகுதியைச் சேர்ந்த விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நிர்வாகி மண்டல துணைச் செயலாளர் மிசா தங்கவேல் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜமோகன் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தார். ஈரோடு மாவட்டம் மக்களின்கோரிக்கைகளைஅமைச்சரிடம்வழங்கினார்.அவருடன்விசிககட்சிநிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### மாநகராட்சி குப்பை வண்டியில் தவறுதலாக போட்ட 5 பவுன் தங்க சங்கலியை

## மூதாட்டியிடம் ஒப்படைத்த தூய்மை பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை சால்வை வழங்கி மேயர் ஜெகன் பெரியசாமி, ஆணையர் ப்ரியங்கா பாராட்டு

தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் தினமும் காலையில் லோடு ஆட்டோ மூலம் தூய்மை பணியாளர்கள் வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரிப்பது வழக்கம்.இந்நிலையில்அண்ணாநகர் 3வது தெரு பகுதியில் தூய்மைபணியாளர்கள் வழக்கம் போல் குப்பை வண்டியில் குப்பைகளை சேகரித்து கதிர்வேல்நகர் பகுதியில் உள்ள நுண் உர மையத்துக்கு கொண்டு சென்றனர்.

அண்ணாநகர் 3வது தெருவை சேர்ந்த முத்துமாலை என்ற பெண் வழக்கம் போல் குப்பைகளை அந்த வண்டியில் கொட்டி உள்ளார். அப்போது முத்துமாலை இடுப்பில் வைத்திருந்த மணிபர்ஸை காணவில்லை. அதில் 5 பவுன் தங்கசங்கலி வைத்து இருந்துள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் குப்பை கழிவுகளோடு சேர்த்து மணிபர்ஸை குப்பை வண்டியில்கொட்டி இருக்கலாம் என்று சந்தேகித்து உடனடியாக கதிர்வேல் நகர் நுண் உரமையத்திற்கு விரைந்து சென்று சம்பவத்தை கூறியுள்ளார். அந்த பகுதியில் சேகரிக்கப்பட்ட குப்பைகளை கொட்டப்பட்டாமல் அப்படியே வண்டியில் இருந்தது. இதைத்தொடர்ந்து முத்துமாலையில் வேண்டுகோளுக்கிணங்க அந்த வண்டியில் இருந்து குப்பைகளை ஒரு தார்பாயில் பாதுகாப்பாககொட்டிதூய்மை வாகன ஓட்டுநர் இசக்கிராஜா தூய்மை பணியாளர்கள் முனீசுவரி,ராணி மற்றும் பொன்செல்வி ஆகியோர் தேடினார்கள். அப்போது அந்த மூதாட்டி போட்ட வாழை இலை கழிவுகளுக்கு மத்தியில் நகையுடன் மணிபர்ஸ் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்த 5 பவுன் நகையுடன் மீட்கப்பட்ட மணிபர்ஸை அந்த பெண்ணிடம் தூய்மை பணியாளர்கள் பத்திரமாக ஒப்படைத்தனர். இதனால் தூய்மை பணியாளர்களுக்கு மூதாட்டி நெகழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தார்.



இந்நிலையில் 5பேரையும் மாநகராட்சிக்கு அழைத்து தூய்மை பணியாளர்கள் உள்பட 5 பேரையும் ஊக்குவிக்கும் விதமாக மேயர் ஜெகன் பெரியசாமி ஆணையர் பிரியங்கா ஆகியோர் சால்வை அணிவித்து ஊக்கத்தொகை வழங்கி ஊக்குவித்து பேசுகையில் மாநகராட்சிக்கு பெருமையை தேடிதந்த உங்களது நேர்மையை பாராட்டுகிறோம் கொரோனா காலக்கட்டத்தில் தாங்கள் ஆற்றிய பணிகளை வாழ்நாளில் மறக்கமுடியாது 60 வார்டுகளிலும் தூய்மை பணிகளை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு முன் உதாரணமாக நீங்கள் இருந்து பணியாற்றியதை போல் எல்லோரும் இதே போன்று பணியாற்றி மாநகராட்சிக்கு மேலும் பெருமை கிடைக்கும் வகையில் எல்லோருடைய பணியும் இருக்க வேண்டும். என்று கேட்டுக்கொண்டனர்.

விழாவில் நகர் நல அலுவலர் கணேஷ்,பகுதி சுகாதார ஆய்வாளர் சந்தனகுமார் திமுக பகுதி செயலாளர் ரவீந்திரன், போல்பேட்டை பகுதி பிரதிநிதிகள் பிரபாகர் ஜேஸ்பர் மேயரின் நேர்முக உதவியாளர் ரமேஷ் ஆணையரின் நேர்முக உதவியாளர் துரைமணி, உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



### கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள

## கே.ஜி.ஐ.எஸ்.எல். கல்லூரியில் 14வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாக அரங்கில் நடைபெற்றது 56 மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டது

கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள கே.ஜி.ஐ.எஸ்.எல். கல்லூரியில் 14-வதுபட்டமளிப்பு விழா கல்லூரி வளாக அரங்கில் நடைபெற்றது

கே.ஜி.ஐ.எஸ்.எல். அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் அசோக் பக்தவத்சலம் தலைமையில் நடைபெற்ற விழாவில் கல்லூரி முதல்வர் சுரேஷ் குமார் அனைவரையும் வரவேற்று பேசினார், விழாவில் சிறப்பு விருந்தினராக பல்கலைக்கழகமானியக்குழு இணைச் செயலாளர் முனைவர் கோபி சந்த் மெஹ்ரு கலந்து கொண்டு பட்டங்களை வழங்கி சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில், "பட்டம் என்பது கல்விப் பயணத்தின் நிறைவு அல்ல; புதிய வாய்ப்புகள் மற்றும் பொறுப்புகளின் தொடக்கம். மாணவர்கள் தங்களது திறமைகளை சமூக நலனுக்காக பயன்படுத்தி, நாட்டின் வளர்ச்சியில் பங்களிக்க வேண்டும். தொழில்நுட்ப அறிவுடன் மனிதநேயம், ஒழுக்கம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வும் அவசியம்" என்று வலியுறுத்தினார்.

மேலும், கல்வி, திறன்கள் ஆன்மிகம் சமூக நலன் ஆகிய மூன்று துறைகளில் சமநிலையுடன் செயல்பட்டால்தான் முழுமையான வெற்றியை அடைய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்விழாவில் இளநிலை மற்றும் முதுநிலைப் படிப்புகளை வெற்றிகரமாக நிறைவு செய்த 556 மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில், துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், என பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள குமரகுரு கல்வி நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள் உருவாக்கிய

## இந்தியாவின் முதல் மனித சக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல் மற்றும் மின்சார பந்தயப் படகு யாழி 5.0 அறிமுக விழா நிகழ்ச்சி நடைபெற்றது

இந்தியாவின் கடல்சார் கண்டுபிடிப்புத் துறையில் ஒரு முக்கிய மைல்கல்லாக, முதன் முறையாக மாணவர்களால் உருவாக்கப்பட்ட, மனித சக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல் மற்றும் அடுத்த தலைமுறை மின்சார பந்தயப் படகை கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள குமரகுரு கல்வி நிறுவனங்கள் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் அறிமுக விழா கோவை குமரகுரு கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது இதில் சிறப்பு விருந்தினராக ஐஎன்எஸ் அக்ரானி செயல் அதிகாரி கேப்டன் பிரதீப் பிரேம்குமார் மற்றும் பெங்களூரு 6த் எலிமெண்ட் இன்ஜினியரிங் நிறுவனத்தின் நிறுவனர் கிரெய்க் மரியோ டி'மெல்லோ ஆகியோர் அறிமுகம்செய்து வைத்தனர். கல்லூரி மாணவர்களால் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட நீர்முழ்கிக்கப்பல் மட்டும் மின்சார படகு உலகின் இரண்டு முக்கிய கடல்சார் பொறியியல் சாம்பியன்ஷிப் போட்டிகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தத் தயாராக உள்ளதாக தெரிவித்தனர். இங்கிலாந்த் நாட்டில், வரும் ஜூன் 29ம் தேதி முதல் ஜூலை 10ம் தேதி,வரை நடைபெறவுள்ள ஐரோப்பிய சர்வதேச நீர்மூழ்கிக் கப்பல் பந்தயத்தில் பங்கேற்க உள்ளதாகவும்,



உலகின் முன்னணி பல்கலைக்கழக மாணவர் குழுக்கள் பங்கேற்கும் இந்தப் போட்டியில், தண்ணீருக்கு அடியில் , மோட்டார் இல்லாத நீர்மூழ்கிக் கப்பலை மனித சக்தியால் இயக்கி, குறிப்பிட்ட நேரத்திற்குள் சவாலான பாதையை வெற்றிகரமாகக் கடக்க தயார் செய்துள்ளதாக தெரிவித்தனர்.

மேலும், இந்தியாவில் இருந்து இந்தப் போட்டிக்குத் தேர்வான ஒரே கல்வி நிறுவனம் குமரகுரு கல்வி நிறுவனம் எனவும் கூறினர். டீம் சீ சக்தி குழுவினர், தங்களது ஐந்தாம்தலைமுறை மின்சார பந்தயப் படகினை தயாரித்து அதற்கு 'யாலி 5.0 என பெயரிடப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



மதுரை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ப. ஆகாஷ், இ.ஆ.ப., அவர்கள்,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பி.கே.அரவிந்த் இ.கா.ப., அவர்கள்,மாநகர காவல் துணை ஆணையர்(வடக்கு) திரு.எஸ். மதிவாணன்,இ.கா.ப.,அவர்கள்,மாநகர காவல் துணை ஆணையர்(போக்குவரத்து) திருமதி.எஸ்.வனிதா அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.அன்பழகன் அவர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடன் உள்ளனர்.

### ஈரோடு மாவட்டத்தில் கலெக்டர் ச.கந்தசாமி "காபி வித் கலெக்டர்" நிகழ்ச்சியில்

## கடந்த 2025, 26 கல்வி ஆண்டில் முதலமைச்சர் தனித் திறனாய்வு தேர்வில் வெற்றி பெற்ற 28 மாணவர்களுடன் கலந்துரையாடினார்

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஆட்சித்தலைவர்ச.கந்தசாமிநேற்று (06.06.2026) "காபி வித் கலெக்டர்" நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்டத்தில் கடந்த 2025- 26 கல்வி ஆண்டில் முதலமைச்சர் தனித்திறனாய்வு தேர்வில் வெற்றி பெற்ற 28 மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.

நேற்றைய தினம் நடைபெற்ற காபி வித் கலெக்டர் நிகழ்ச்சியில், மாணவ, மாணவியர்கள் கல்வியறிவோடு சமூகம் மற்றும் பொது அறிவும் மேம்பட வேண்டும் என் நோக்குடன் மாவட்ட ஆட்சித்தலைவர்அவர்கள்,மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடிய போது தெரிவிக்கயிலை, மாணவர்கள் சமூக மேம்பாட்டுக்காக தாங்கள் பயிலும் பள்ளி படிப்பினை ஊன்றுகோலாக வைத்து மேலும் முன்னேற பாட புத்தகம் தாண்டி உலக அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு சமூக உணர்வை ஏற்படுத்தும் நாளிதழ்கள் செய்தித்தாள்கள் போன்றவற்றை படிப்பதில் அக்கறை செலுத்த வேண்டும்.

மேலும்,மாணவ,மாணவியர்கள் உயர்கல்வியில் கற்பதற்கு ஏராளமான பாடப்பிரிவுகள் உள்ளது. எனவே தங்களுக்கு விருப்பமான பாடத்தை தேர்ந்தெடுத்து படிக்க வேண்டும். பள்ளி மற்றும் கல்லூரி படிப்போடு அல்லாமல் போட்டித்தேர்வுகளுக்கும் தயாராகும் வகையில் பயிற்சி பெற வேண்டும். தனி மனிதனை சமூகத்தில் உயர்த்துவது கல்வியால் மட்டுமே இயலும். அத்தகைய கல்வியை மாணவ,மாணவியர்கள் ஆர்வத்துடன் கற்க வேண்டும், மேலும் தொடர்ந்து புத்தகம் வாசிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார். மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தனது அரசுப்பணியில் சேர்ந்த பிறகு சந்தித்த நிகழ்வுகள் மற்றும் மாணவ,மாணவியர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் வகையில் கருத்துக்களை பகிர்ந்து கொண்டதுடன், மாணவ, மாணவியர்களின் பள்ளியில் ஏற்பட்ட சுவாரசியமான நிகழ்வுகள் குறித்து கேட்டறிந்தார். மேலும் மாணவ மாணவியருக்கு உயர்கல்வி, கல்வியின் முக்கியத்துவம், புத்தகங்கள் படித்தல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் அறிவுரை வழங்கி கலந்துரையாடினார். காபி வித் கலெக்டர் நிகழ்ச்சியில், முதலமைச்சர் தனித் திறனாய்வு தேர்வில் வெற்றி பெற்ற 28 பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர்.



பள்ளி மாணவ மாணவியர்கள் அனைவருக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திருக்குறள் புத்தகங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மான்விழி, பள்ளி ஆசிரியர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் குழந்தைராணி நாச்சியார் மக்கள் பணியில் தீவிரம் காட்டி வருகிறார். இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவது , சிவகங்கை நகரில் சேகரிக்கப்படும் கழிவுகளையும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மூலம் வெளியேற்றப்படும் கழிவுகளையும் மக்கச் செய்ய நிரந்தரமான இடத்தை ஏற்படுத்திக் கொடுப்பது , அடிப்படை வசதியான சாலை வசதி , குடிநீர் வசதி இவற்றோடு தாகத்தை தணிக்க ஆங்காங்கே நீர் , மோர் பந்தல்கள் என மக்கள் பணியில் அதிகக் கவனம் செலுத்தி வருகிறார். இந்தப் பணிகளோடு தொய்வில்லாமல் ஆங்காங்கே கட்சிக் கொடிகளையும் ஏற்றி வைக்கிறார். தினந்தோறும் நேரங்களை ஒதுக்கி முடிந்த அளவில் கிராமங்களுக்குச் சென்று வாக்காளர்களுக்கு நன்றியும் தெரிவிக்கிறார். இவரின் தீவிர நடவடிக்கைகளைப் பார்த்து கிராமங்களில் இருந்து அதிகமான தொண்டர்கள் கட்சியில் இணைந்து வருவதையும் பார்க்க முடிகிறது.

## கடையம் அருகே குவாரியில் அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட தமிழக வெற்றி கழக ஒன்றிய நிர்வாகி

தென்காசி மாவட்டம் கடையம் அருகேயுள்ளசொக்கலிங்கபுரம் பகுதியைச் சேர்ந்தவர் ராமகிருஷ்ணன் மகன் சக்திவேல் (வயது 37), இவர் தமிழக வெற்றி கழகத்தின் ஆலங்குளம் தொகுதியின் தகவல் தொழில்நுட்ப பிரிவு ஒன்றிய பொறுப்பாளராக இருந்து வந்தார்.

இவருடையமனைவி பெருசு தெரசா, காதலித்து திருமணம் செய்து கொண்ட இவர்களுக்குஇரண்டு ஆண் மற்றும் ஒரு பெண் குழந்தை உள்ளது.

இந்த நிலையில் கடந்த நான்கு நாட்களுக்கு முன்பாக சக்திவேல் அவரது மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக வீட்டை விட்டு வெளியே சென்றதாக கூறப்படுகிறது.

தொடர்ந்து வீடு திரும்பாத நிலையில் இன்று கடையம் அருகே உள்ள மூடப்பட்ட தனியார் குவாரியில் உள்ள தண்ணீரில் ஆண் சடலம் கிடப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதன் பேரில் ஆலங்குளம் தீயணைப்புத் துறையினர் உதவியுடன் கடையம் போலீசார் சடலத்தை மீட்டு சோதனை செய்தபோது நான்கு நாட்களுக்கு முன்பு மாயமான சக்திவேல் என்பது தெரியவந்தது. மேலும் அவர் இறந்தும் நான்கு நாட்கள் இருக்கும் என்று போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்த சம்பவம் தொடர்பாக கடையம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



ஈரோடு மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# 12 ஆம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் வழங்கும் பொருட்டு மாவட்ட கட்டுப்பாட்டு அறையினை துவக்கி வைத்தார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், 12ஆம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கு உயர் கல்வி வழிகாட்டுதல் வழங்கும் பொருட்டு மாவட்ட கட்டுப்பாட்டு அறையை (District Career Guidance Control Room), மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி துவக்கி வைத்தார்.

மேலும் ஆட்சியர் அவர்கள் தெரிவிக்கையில் கடந்தாண்டு 95% மாணவர்கள் உயர்கல்விக்கு சென்றதற்கு பாராட்டு தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல் இந்த ஆண்டு பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலிடம் பெற்றதற்கு பாராட்டுகளை தெரிவித்தார். மேலும் கடந்தாண்டு இலக்கைக் காட்டிலும் கூடுதலாக இவ்வாண்டு 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களும் 100% உயர்கல்வி சேர்க்கை அடைவதற்கு மாவட்ட அளவில் அனைத்துதுறைகளுடன் ஒருங்கிணைத்து மாவட்ட கட்டுப்பாட்டு அறை துவக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

உயர்கல்வி வாய்ப்புகள், கல்லூரி சேர்க்கை நடைமுறைகள், கல்வி உதவித்தொகை, சான்றிதழ்கள், கல்விக்கடன் மற்றும் தொழில்நுட்ப கல்வி வழிகாட்டுதல் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன எனவும் மாணவர்கள் இந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும், மாணவர்கள் மாவட்ட கட்டுப்பாட்டு அறையில் நேரிலோ அல்லது கொடுக்கப்பட்டுள்ள மாவட்ட கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்: 9042580535/9659232531/04242260999 தொடர்பு கொண்டும் உதவிகளை பெற்றுக் கொள்ளலாம் என தெரிவித்தார்.

மேலும் 12ஆம் வகுப்பில் தோல்வியுற்ற மாணவர்களை துணை தேர்வுக்கு விண்ணப்பிக்க செய்து அம்மாணவர்களையும் உயர் கல்வியில் சேர்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், அனைத்து மாணவர்களும் உயர்கல்வி சேர்வதற்கு குழு உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும் மாவட்ட கட்டுப்பாட்டு அறை உறுப்பினர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட உதவி ஆட்சியர் முரளி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் தேன்மொழி, முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர் இ.மான்விழி, மாவட்ட கல்வி அலுவலர் இரவிக்குமார், முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் வெங்கடேஷ், உதவி திட்ட அலுவலர் பரமசிவம் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஒன்பது வருடமாக கட்டப்படும் எய்ம்ஸ் கல்லூரி இந்த நேரத்தில் அணை கூட கட்டிருக்கலாம்

## விரைவில் அதற்கான பணிகளை முடித்து எய்ம்ஸ் மருத்துவமனை தொடங்கப்படும்

### மின்சாரத் துறை அமைச்சர் நிர்மல் குமார் பேட்டி



மதுரை அவனியாபுரத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவி நிகழ்ச்சியில் பங்கேற்ற மின்சாரத் துறை அமைச்சர் நிர்மல் குமார் செய்தியாளர்களை சந்தித்தார்;-

அதில் தொடர்ச்சியாக பல பகுதிகளில் மாற்றுக் கட்சியில் இருந்து இணைப்பு விழா நடைபெற்று வருகிறது. தலைமை மீது நம்பிக்கை இல்லாமல் எங்கள் தலைவர் விஜய் அவர்களின் பாதையை ஏற்றுக் கொண்டு வருகிறார்கள்.

தமிழகம் முழுவதும் தலைமைக் கழகத்தில் கூட முக்கிய முன்னாள் அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், முன்னாள் எம்எல்ஏக்கள் வந்து இணைந்துள்ளனர். மக்களின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டு பயணிக்கிறார்கள். மதுரை விமான நிலைய விரிவாக்கம் தாமதம்?

நீர் பிடிப்பு பகுதிகளை எடுப்பதில் மறுசீரமைப்பு செய்ய வேண்டியதாக இருக்கும். தேவையான நிலங்கள் எடுக்கப்பட்டுள்ளது சுற்றுச்சுவர் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. நீர் பிடிப்பு இடங்களை எடுக்கும் போது மறு சீரமைப்பு செய்ய வேண்டும்.

அதிமுக கட்சி தலைமையின் செயல்பாடுகள் சில வருடங்களில் எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கு பாஜக மத்திய அமைச்சர் பதவி கொடுத்தால் கூட அதிமுகவை பாஜக உடன் இணைக்கும் பணியை கூட தயங்காமல் செய்வார். 40 50 ஆண்டுகளாக அதிமுகவில் பணி செய்தவர்கள் கைவிடப்பட்டுள்ளனர். புரட்சித்தலைவர், அம்மாவை நம்பி உழைத்தவர்கள் பாதையை மறந்து திமுக உடனே பயணம் செய்ய முயற்சி செய்த எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் அடுத்து என்ன செய்வார் இன்று பயணிக்க முடியும் என கேள்வி எழுப்புகிறார்கள். நீட்டில் குளறுபடி நடைபெறுகிறது தேர்வை கூட சரியாக நடத்த முடியவில்லை தவறான மாணவர்கள் எவ்வளவு பேர் உள்ளே சென்றுள்ளார்கள்.

தனியார் செடி சென்டர்கள் மூலமாக கோடிக்கணக்கில் சம்பாதிப்பதற்கு ஒன்றிய அரசு வழிவகை செய்துள்ளது. மாணவர்களுக்கு உதவியாக இல்லை. மாணவர்கள் மன உளைச்சலில் உள்ளனர்.

பத்து வருடமாக டிஜிட்டல் என மோடி அரசு கூறுகிறது. காதில் கம்பளை கூட கழட்ட சொல்லி உள்ளே இவ்வளவு பெரிய முறை கேடும் நடந்தால் இதற்கு மேல் வெட்கக்கேடு எதுவும் இல்லை.

முறைகேடான குவாரி மூடப்பட்டுள்ளது அதற்கான அஸஸ்மென்ட் நடைபெற்று வருகிறது நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது அதற்கான விசாரணை முடிந்தபின்பு தான் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். என்றார்.

தென்காசியில் நடைபெறும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் சங்க கண்காட்சியில் கலந்து கொண்ட

# அமைச்சர் மதன் ராஜா தொழில் வளர்ச்சிக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் விதமாக இந்த கண்காட்சி உள்ளது என்று பேட்டி



தென்காசியில் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் சங்கம் சார்பில், மூன்றாம் ஆண்டு தொழில் மற்றும் வர்த்தக கண்காட்சி நேற்று தொடங்கி 3 நாட்கள் நடைபெறுகிறது. கண்காட்சியில் விவசாய உபகரணங்கள், விவசாயம் மற்றும் கட்டிட வேலைகளுக்கு தேவையான கனரக வாகனங்கள், சூரிய ஒளி மூலம் செயல்படும் விளக்குகள், கட்டிடங்களுக்கு தேவைப்படும் ஜல்லி, மண் போன்ற கனிம பொருட்களின் வகைகள், மகளிர்குழுக்கள் மூலம் தயாரிக்கப்படும் அழகு சாதன பொருட்கள் உள்ளிட்ட ஏராளமான அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது

இரண்டாவது நாளான இன்று கண்காட்சியில், பள்ளி மாணவர்களுக்கு ஓவியப்போட்டி, பேச்சு போட்டி, நவீன ரோபோடிக் கருவிகள் கண்டுபிடிப்பு என பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது நடைபெற்ற ண்காட்சிகளை தமிழக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர் மதன் ராஜா கலந்து கொண்டு கண்காட்சியை தொடங்கி வைத்தார்

தொடர்ந்து கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள 109 அரகுகளையும் பார்வையிட்டார். மாவட்டத்தில் சிறந்த முறையில் செயல்படும் சிறு குரு தொழில் முனைவோர்களை கௌரவிக்கும் விதமாக பொன்னாடை அணிவித்து சான்றிதழ் வழங்கினார். போட்டியில் பங்கேற்ற பரிசுகள் வழங்கினார். அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மதன் ராஜா கூறியதாவது சென்னை, கோயம்புத்தூர் போன்ற பெரு நகரங்களில் நடைபெறும் இது மாதிரியான கண்காட்சி, தென் மாவட்டங்களில் நடைபெறுவது ஆரோக்கியமான விஷயம் என்றும், இது தொழில் வளர்ச்சியில் அடுத்த கட்ட நம்பிக்கை ஏற்படுத்தும் விதமாகவும் தொடர்ந்து இது மாதிரியான கண்காட்சிகள் நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# விசைத்தறி கூட்டமைப்பு செயற்குழு: 15 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றம்



ஈரோடு தலைமை அலுவலகத்தில் தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழகம் முழுவது மிருந்து மாநில, மண்டல, மாவட்ட நிர்வாகிகள் நேரடியாகவும், வாட்ஸ்அப் கான்பிரன்ஸ் வழியாகவும் கலந்து கொண்டு புதிய அரசுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். விசைத்தறி தொழிலையும் நெசவாளர்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும் வகையில் மொத்தம் 15 முக்கிய தீர்மானங்கள் இக்கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

அவற்றில் குறிப்பாக, அனைத்து விசைத்தறி கூடங்களுக்கும் தற்போது வழங்கப்படும் 1,000 யூனிட் இலவச மின்சாரத்தை தேர்தல் வாக்குறுதிப்படி 1,500 யூனிட்டுகளாக உடனடியாக உயர்த்தி வழங்க வேண்டும், பொங்கல் இலவச வேட்டி-சேலை உற்பத்தியை நெறிமுறைப்படுத்தி நெசவாளர்களுக்கு முழுமையாக 6 மாத கால வேலைவாய்ப்பு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும், வீடுகளுக்குள் இயங்கும் சிறு குறு விசைத்தறி கூடங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள சொத்து வரி உயர்வை ரத்து செய்து தொழிற்சாலை வரியிலிருந்து மீண்டும் பழைய வீட்டு வரிக்கே மாற்ற வேண்டும், விசைத்தறிக்கூடங்களின் மேற்கூரையில் 50 சதவீத மானியத்துடன் கூடிய சோலார் பேனல்களை அமைத்து மின் கட்டண சுமையை குறைக்க வழிவகை செய்ய வேண்டும், அரசுத் துறை பணியாளர்களின் சீருடைகள் மற்றும் அரசுப் பள்ளி மாணவர்களின் சீருடை டிசைன்களை விசைத்தறிகளில் உற்பத்தி செய்யக்கூடியதாக மாற்றி நெசவாளர்களுக்கு வழங்க வேண்டும் மற்றும் சாயக் கழிவு பாதிப்பிலிருந்து விசைத்தறி தொழிலை பாதுகாக்க மாவட்டத்திற்கு ஒரு பொது சுத்திகரிப்பு நிலையத்தை அரசு சார்பில் அமைத்துத் தர வேண்டும் ஆகிய முக்கிய கோரிக்கைகள் முன்னிலைப்படுத்தப்பட்டன. இக்கூட்டத்தைத் தொடர்ந்து, விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகள் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சண்முகத்தை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்தனர். அடுத்த வாரம் சென்னையில் உள்ள தலைமைச் செயலகத்தில் துறை சார்ந்த அமைச்சர்களை நேரில் சந்தித்து இந்தத் தொழில்சார்ந்த கோரிக்கைகளை சமர்ப்பிக்க உள்ளதால், அதற்கு தங்களுடன் உடன் வருமாறு சட்டமன்ற உறுப்பினரிடம் விசைத்தறி யாளர்கள் முறைப்படி வேண்டுகோள் விடுத்தனர்.

# பி.ஆர்.ஜி. பள்ளியில் 'ப்ராஜெக்ட் ஸ்வர்ணம்' கடல்சார் பயணத்திற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி




கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவிலில் என்.சி.சி. சார்பில் மரக்கன்று நடும் விழா; 'ப்ராஜெக்ட் ஸ்வர்ணம்' கடல்சார் பயணத்திற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.


கடல்சார் பாரம்பரியம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை முன்னிறுத்தும் வகையில், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான் நிக்கோபார் என்.சி.சி. இயக்குநரகம் சார்பில் "கடலுக்குப் போவோம்-ப்ராஜெக்ட் ஸ்வர்ணம்" என்ற கருப்பொருளில் 'கடல்சார் பாய்மரக் கப்பல் பயணம் 2026' ஜூலை முதல் செப்டம்பர் மாதம் வரை நடத்தப்பட உள்ளது.

கடலூர் 5 தமிழ்நாடு என்.சி.சி. கடற்படை பிரிவு மாணவர்கள் முன்னெடுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டின் செழுமையான கடல்சார் பாரம்பரியம், புத்தாக்கம் மற்றும் நீடித்த நிலையான வளர்ச்சி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது. மேலும், நீலப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் ராமேஸ்வரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி உள்ளிட்ட முக்கிய கடலோரப் பகுதிகள் வழியாக இந்தப் பயணம் மேற்கொள்ளப்படவுள்ளது. பண்டைய கடல்சார் வணிகப் பாதைகள், கடலோரப் பண்பாடு மற்றும் கடல்சார் மரபுகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

இந்நிலையில், உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு 6 தமிழ்நாடு பட்டாலியன் என்.சி.சி., அண்ணாமலைநகர் சார்பில் காட்டுமன்னார்கோவில் பி.ஆர்.ஜி. மேல்நிலைப் பள்ளியில் மரக்கன்று நடும் விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் என்.சி.சி. மாணவர்கள், பள்ளி மாணவ-மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட 100-க்கும் மேற்பட்டோர் பங்கேற்று மரக்கன்றுகளை நட்டனர்.

இந்த நிகழ்ச்சி சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியத்தையும், இயற்கையுடன் இணைந்த நிலையான வாழ்வியலின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தும் வகையில் நடைபெற்றது. மரக்கன்று நடும் விழா மூலம் மாணவர்களிடையே பசுமை பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# Arms recovered, 4 held from Sandeshkhali linked to TMC strongman Sheikh Shahjahan



*The Special Task Force (STF) of the West Bengal Police on Saturday recovered a huge cache of arms and ammunition and arrested one more person from Sandeshkhali in West Bengal's North 24 Parganas district in connection with Sheikh Shahjahan, a strongman of the Trinamool Congress (TMC), who masterminded an attack on Enforcement Directorate officials in January 2024.*

*Raids were still underway, police said.*

*Shahjahan was arrested in February 2024 and has been in custody since then.*

*Police had initially arrested three men, allegedly close associates of Shahjahan, who led them to the first spot at Sarberia, from where five firearms were recovered from an abandoned house.*

*Acting on their information, police then raided another location in a village in Manipur, from where 13 firearms and ammunition were recovered from beneath a fish farm. One more person was arrested from there.*

*"Sheikh Shahjahn used to run this network. They had procured the arms and used them in various crimes. Investigation is going on," a senior police officer, requesting anonymity, said.*

*"Police have recovered 10 long firearms and eight small arms along with 56 live cartridges. In total we have arrested four persons. Two persons have been detained for questioning. Raids are still going on. Our teams are on the ground. We are getting more information," he added.*

*In February 2024, protests erupted in Sandeshkhali, with villagers, mostly women, demanding the arrest of Shahjahan and his aides over allegations of land grabbing and sexual assault against women. The Calcutta High Court later ordered a CBI probe, and the TMC leader, along with his aides Shibaprasad Hazra and Uttam Sardar, was arrested.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.